LIBRARY
29 JUN 2011
Eastern University, Sri Lanka.

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(மே/யூன் 2011)

## PHY 101 மெய்யியல் பிரச்சினைகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து எவையேனும் இரு வினாக்களையும், பகுதி – II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி – I

01. (அ) எடுப்பு முரண்பாடு, வெளிப்பேறு என்பனவற்றை வேறுபடுத்துக.

(ஆ) பின்வருவனவற்றை விளக்குக,

i. A எடுப்பின் எதிர்மாற்றம் ஏன் A எடுப்பாக இல்லை.

ii. I எடுப்புக்கு ஏன் எதிர்வைக்கை இல்லை.

(இ) பாரம்பரிய முரண்பாட்டு சதுரம் தொடர்பாக சமகால அளவையியலாளர்களினால் முன்வைக்கப்பட்டிருக்கும் விமர்சனத்தினை எடுத்துக்கூறி விளக்குக.

02. (அ) பின்வரும் வாதங்களை வகுப்படிப்படையில் குறியீட்டிலமைத்து வென்வரைபட உதவியுடன் அவற்றின் வாய்ப்பினைத் துணிக.

(i) எல்லா நடிகர்களும் பிரபலமானவர்கள், வினித் நடிகர் அல்லன் ஆகவே வினித் பிரபலமானவன் அல்லன்.

(ii) பறவைகள் அழகானவை ஏனெனில் எல்லா அழகான பொருட்களும் குறைவாக இருப்பதுடன் பறவைகள் குறைவாக இருப்பதுமே காரணமாகும்.

(iii) சில கிளிகள் மட்டும் பழம் சாப்பிடும், கிளிகள் பாடுபவை ஆகவே பாடுபவை எல்லாம் பழம் சாப்பிடும்.

(ஆ) குறைநியாயத் தொடை என்றால் என்ன? எனக்கூறி உதாரணத்துடன் விளக்குக.

*******

03. பின்வரும் தேற்றங்களை நிறுவுக.

(அ) $(P \to Q) \to [(Q \to R) \to (P \to R)]$
(ஆ) $[(P \to Q) \vee (Q \to R)]$
(இ) $[(P \to \sim P) \leftrightarrow P] \sim P$
(ஈ) $[(P \to Q) \leftrightarrow \sim (P \wedge \sim Q)]$

04. (அ) நியம, நியமமில் போலிகளை வேறுபடுத்துக.

(ஆ) பின்வரும் நியமமில் போலிகளை உதாரணம்மூலம் விளக்குக.

i. சமுதாயப் போலி
ii. காகதாலிய நியாயப் போலி
iii. முடிவுமேற்கோளல் போலி

(இ) கீழ்வரும் பந்திகளில் காணப்படும் போலிகளை இனங்கண்டு ஏற்பட்டுள்ள போலியை சுருக்கமாக விளக்குக.

i. இலங்கையில் டைனோசர் வாழ்ந்ததாக இதுவரைக்கும் எந்தவொரு ஆதாரமும் கிடைக்கவில்லை. ஆகவே இலங்கையில் டைனோசர் வாழவில்லை.

ii. நீர் எனக்கு இப்போது ரூ. 5000 தரவேண்டும். ஏனெனில் மதுபானசாலையில் நீர் இருந்ததை உமது பெற்றோர் அறிவதை விரும்பமாட்டாய்.

iii. அந்தப் படையணி மிகவும் திறமையானது எனவே அந்தப்படையணியில் உள்ள அமலும் திறமையானவன்.

## பகுதி – II

05. மெய்யியலின் தோற்றம், அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சி என்பனவற்றை தெளிவுபடுத்துக.

06. கடவுள் இருப்பு பற்றிய நிருபணங்களில் எவையேனும் மூன்றினை சுருக்கமாக ஆராய்க.

07. உடல் உளப் பிரச்சினை தொடர்பான மெய்யியல் அணுகுமுறையினை விமர்சன ரீதியாக ஆராய்க.

08. தண்டனை என்றால் என்ன எனக்கூறி, தண்டனை தொடர்பான ஒழுக்கவியல் பிரச்சினைகளை விமர்சன ரீதியாக ஆராய்க.

******